**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**STC. 945/2022 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சேகர் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ.தங்கராஜ் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலைச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 2022ம் வருடம் எனக்கு விபத்தில் காயம் ஏற்பட்டது. வழக்கு சம்பவம் பற்றி வேறு எதுவும் தெரியாது. சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது புகார் மனுக் கொடுத்துவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு சந்தேகத்தின் அடிப்படையில் நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. மேற்படி சம்பவத்திற்கு பிறகு ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது தவறு இல்லை என தெரிய வந்ததால் நாங்கள் ராசியாகி சமாதான மனு தாக்கல் செய்துள்ளோம்.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1. நானும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான். சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். **மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

2. கடந்த 11.07.2022ம் தேதி 18.00 மணிக்கு TN 75.AC.9656 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிளில் நானும் விஜயகுமார் என்பவரும் சென்றபோதுTN 75.N.1881என்ற அரசுப்பேருந்தை குற்றம் சுமத்தப்பட்ட நபர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியதில் எனக்கும் விஜயகுமார் என்பவருக்கும் காயம் ஏற்பட்டதென்றும் சம்பவம் சம்மந்தமாக புகார் மனுக்கொடுத்தேன் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் சமாதானமாகிவிட்டதால் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை**</u> :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.